சாட்சிய வாக்குமூலம்

(கு.வி.மு.ச.அத்தியாயம் 23)

முதல் கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், ஈரோடு மாவட்டம்

அமர்வு வழக்கு எண்.102/2017

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 02–ம் தேதி நாள் அரசு தரப்பு சாட்சியாக அ.த.சா.–16வது சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1968ம் ஆண்டு 54 வது சட்டத்தில் உள்ள 5(2) பிரிவின்படி ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது. 2ம் எதிரி ஆஜர். 1,3ம் எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை அவர்கள் கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார்கள். அந்த மனு அனுமதிக்கப்பட்டது.(அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்து | மாவட்டம் | : | |
| த/பெ.பெயர் | : | சுப்பிரமணி | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| வட்டம் | : | | | | |

<u>முதல் விசாரணை:</u>

1. நான் தற்போது இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் துணை இயக்குநரக பணிபுரிந்து வருகிறேன். தடய அறிவியல் சென்னை ஆவணபிரிவில் அறிவியல் அலுவலகராக பணிபுரிந்த போது 27.02.2015 அன்று ஈரோடு வடக்கு காவல் நிலைய குற்ற எண்.340/2014 வழக்கில் தொடர்புடைய ஆவணங்கள் ஆய்வுக்காக பெறப்பட்டது. அதில் அருண்ராம் என்பவர் எழுதியதாக சொல்லப்பட்ட 10 பக்கங்கள் கொண்ட கடிதத்தில் இருந்த கையொப்பங்கள் தமிழ் மற்றும் ஆங்கில எழுதுக்கள் A1 முதல் A19 வரை குறியீடுசெய்யப்பட்டது.

2. எஸ்.ஆர்.எம் டெண்டல்காலேஸ் என்ற ஸ்பைரல் செய்யப்பட்ட பக்கங்களில் இருந்து ஆங்கில எழுத்துக்கள் மற்றும் எண்கள் B1 முதல் B4 வரை குறியீடுசெய்யப்பட்டது. ஈரோடு செங்குந்தர் இன்ஜினியரிங் காலேஸ் என்ற டைரியில் இருந்து தமிழ் எழுத்துக்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கள் மற்றும் எண்கள் C1 முதல் C 11 வரை குறியீடு செய்யப்ட்டது. எஸ்.பி.எம். கொண்ட நோட்புக்கில் இருந்த கையொப்பங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கள் D1 முதல் D10 வரை குறியீடு செய்யப்பட்டது.

3. A1 முதல் A19 வரை, B1 முதல் B4 வரை, C1 முதல் C 11 வரை மற்றும் D1 முதல் D10 வரை குறியீடு செய்யப்பட்ட கையெப்பங்கள், தமிழ் மற்றும்

ஆங்கில எழுத்துக்கள் மற்றும் எண்களை ஒப்பிட்டு ஆய்வு செய்து A1 முதல் A19 வரை, B1 முதல் B4 வரை, C1 முதல் C 11 வரை மற்றும் D1 முதல் D10 வரை குறியீடு செய்யப்பட்ட அனைத்தும் ஒரே நபரால் எழுதப்பட்டது என்று கருத்துரை வழங்கப்பட்டது. அந்த கருத்துரைக்கான காரணங்களை விபரித்து காரணத்தாளில் இணைத்து அறிக்கையாக வழங்கப்பட்டுள்ளது.

4. மேற்படி தடவியல் அறிவியல் துறை வழங்கிய தடவியல் அறிவியல் அறிக்கை **அ.த.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை:-**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறிவிட்டார்கள்.